**Deposition of witness**

**(Chapter XXIII code of Criminal Procedure)**

**In the court of Judicial Magistrate No.II,**

**Tindivanam.**

**CASE NO.STC. 334/2024**

**Prosecution witness – PW –1**

| | | | |
|---|---|---|---|
| Date | 26.11.2025 | Calling | |
| Name | காத்தவராயன் | Religion | |
| Father/Husband Name | வீரப்பன் | Age | 42 |
| Village/City | முன்னூர் | Caste. | |
| Taluka. | | | |

**Accused present.**

**எதிரி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை**

**1.** 27.09.2021 நான் எதிரி வள்ளி மற்றும் அரசு ஆகியோர்கள் சேர்ந்து கிரைய உடன்படிக்கை ஆவணம் ஏற்படுத்திக் கொண்டோமா என்றால் ஏற்படுத்திக் கொண்டோம். அந்த கிரைய உடன்படிக்கை ஆவணத்தை மூன்று பேரும் சேர்ந்து பதிவு செய்தோமா என்றால் இல்லை. அந்தக் கிரையை உடன்படிக்கை ஆவணத்தில் யார் யார் கையொப்பம் செய்தோம் என்றால் நாங்கள் மூன்று பேரும் கையொப்பம் செய்தோம். நானும் அரசு என்பவரும் மட்டும்தான் கையொப்பம் செய்துள்ளோம் என்றாலும் எதிரி கையப்பம் செய்ய வில்லை என்றாலும் சரியல்ல, நாங்கள் மூன்று பேரும் சேர்ந்து மரக்காணம் சென்று மூன்று பேரும் ஒன்றாக கையொப்பம் செய்தோம். யாருடைய சொத்தை கிரையம் பெறுவதற்காக நாங்கள் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் எதிரி வள்ளி என்னிடம் கவியரசன் என்பவரின் சொத்தை கிரயம் பெற்று தரும்படி என்னிடம் கேட்டார்கள்.

**2.** 26.04.2024 தேதியில் ஒரு உடன்படிக்கை ஆவணம் ஏற்படுத்திக் கொண்டோமா என்றால் இல்லை. மேற்படி தேதியில் உடன்படிக்கை ஆவணம் ஏதேனும் ஏற்படுத்தியிருந்தால் அது செல்லத்தக்கது அல்ல என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேனா என்றால் படித்து பார்த்துதான் தாக்கல் செய்தேன். நான் என்ன வேலை

செய்கிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன். மேலும் பேங்கில் ஒப்பந்த ஊழியர் ஆக உள்ளேன். நான் எந்த வங்கியில் இருக்கிறேன் என்றால் பிரம்மதேசம் இந்தியன் வங்கியில் இருக்கிறேன். வங்கியில் எனக்கு மாத வருமானம் எவ்வளவு வரும் என்றால் 6000 அல்லது 7000 வரும். விவசாயம் மூலமாக எனக்கு எவ்வளவு வருமானம் வரும் என்றால் ஆண்டிற்கு ஆறு அல்லது ஏழு லட்சம் வரும். எனக்கு அசையும் அசையா சொத்துக்கள் எவ்வளவு உள்ளது என்றால் 10 ஏக்கர் சொத்து உள்ளது. அதன் மதிப்பு 5 கோடி ஆகும். எனக்கும் எதிரிக்கும் எவ்வாறு பழக்கம் ஏற்பட்டது என்றால் சொத்து வாங்குவது சம்பந்தமாக தான் பழக்கம்.

**3.** நான் முதலில் ஏற்பட்ட உடன்படிக்கையின் போதுதான் எதிரி என்னிடம் கடன் வாங்கினாரா என்றால் உடன்படிக்கையின் போது பணம் வாங்கவில்லை கிரையத்தின் போதுதான் பணம் வாங்கினார். எதிரி தனது சொந்த செலவிற்காக என்னிடம் பணம் கேட்கவில்லை என்றால் சொத்து வாங்குவதற்காக கேட்டார். அந்தக் கிரைய தொகை கொடுப்பதற்கு ஏற்பட்ட கால தாமதத்திற்காகதான் எதிரியிடம் காசோலை வாங்கினேன் என்றால் கிரையம் செய்வதற்கு பணம் பத்தவில்லை என்பதால்தான் பணம் கொடுத்தேன். எனக்கு கிரைய ஒப்பந்தத்தின்படி கிரையம் செய்து கொடுக்க மறுத்து இருந்தால் நான் உரிமையியல் நீதிமன்றத்தைதான் அணுகியிருக்க வேண்டும் என்றாலும் இந்த நீதிமன்றத்தில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. எதிரி கிரையம் செய்து கொள்ள மறுத்து இருந்தால் கட்டாய கிரையம் செய்து கொடுக்க உரிமையியல் நீதிமன்றத்தை தான் அணுகி இருக்க வேண்டும் என்றால் சரியல்ல. இந்த எதிரிக்கு எதிராக காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்து பரிகாரம் பெற இயலாது என்றால் சரியல்ல.

**4.** எனக்கு கிடைக்கக்கூடிய பரிகாரம் உரிமையியல் நீதிமன்றத்தில் தான் கிடைக்கும் என்றால் சரியல்ல. 27.09.2021 தேதியிலேயே எனக்கும் எதிரிக்கும் இருந்த கடன் பிரச்சினை முடிந்து விட்டது என்றாலும் 2024-ஆம் ஆண்டு எதிரி எந்த காசோலையும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல, 2024 ஆம் ஆண்டு அவரது வீட்டில் வைத்துதான் காசோலை கொடுத்தார். நான் கிரைய உடன்படிக்கை சம்பந்தமாக எதிரிக்கு 2024 ஆம் ஆண்டு தொகை ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. 2024 ஆம் ஆண்டு எதிரிக்கு நான் பணம் கொடுக்காதபோது எதிரி எனக்கு காசோலை கொடுத்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. 27.09.2021 எதிரிக்கும்

எனக்கும் ஏற்பட்ட கிரைய உடன்படிக்கை ஆவணம் பதிவு செய்யப்படாத காரணத்தினால் இந்த காசோலை மோசடி வழக்கு சம்பந்தமாக தொகை எதுவும் என்னால் பெற முடியாது என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு எதிராக பின் தேதியிட்ட காசோலையைதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 27.09.2021 காசோலை கொடுத்த காரணத்தினால் மூன்று மாத காலத்திற்குள் அதன் காலக்கெடு முடிந்து விட்டது என்றாலும் 2024 அதைபொறுத்து எந்த பரிகாரமும் பெற இயலாது என்றால் 26.04.2024 தேதியில் தான் காசோலை கொடுத்தார்.

**5.** கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திய பிறகு எதிரியிடம் நான் ஒப்படைத்து விட்டேன் அவர் சாட்சி கையப்பம் வாங்கிக் கொள்வதாக சொல்லிவிட்டார். காசோலை கொடுத்த தேதியில் எனது வங்கிக் கணக்கில் எவ்வளவு தொகை கையிருப்பு இருந்தது என்றால் தெரியவில்லை. காசோலை திருப்பப்பட்ட தேதியில் எதிரியின் வங்கி கணக்கில் எவ்வளவு தொகை இருந்தது என்று நான் பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நான் வங்கியில் காசோலையை செலுத்தியதற்கான செல்லானை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்னா என்றால் இல்லை, தேவைப்பட்டால் தாக்கள் செய்கிறேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் தேதி குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் தெரியவில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் பரிகாரத்தை தவறாக கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எந்த இடத்தில் படித்து பார்த்து கையொப்பம் போட்டேன் என்ற விவரம் எனது பிரமாண வாக்குமூலத்தில் இல்லை என்றால் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன்.

**6.** எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது சுயவிபரம் எதுவும் இல்லை என்றாலும் வழக்கறிஞர் தயார் செய்ததில் நான் கையொப்பம் மட்டும்தான் செய்தேன் என்றாலும் நான் சொன்ன விவரத்தைதான் வழக்கறிஞர் பிரமாண வாக்குமூலத்தில் பதிவு செய்தார். எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்று விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனக்கு ஆண்டிற்கு ரூபாய் 5 லட்சம் வருமானம் வரும் என்ற விவரத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மனு மற்றும் சட்ட அறிவிப்பில் எதிரியிடமிருந்து எந்த வட்டி தொகையும் தேவையில்லை என்றுதான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். எதிரி எனக்கு எந்த தொகையும் செலுத்த கடமைப்பட்டவன் இல்லை என்ற காரணத்தினால்தான் எந்த பதில் அறிவிப்பும்

கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் உள்ள கடன் தொகை காலம் முடிவடைந்துவிட்டது என்றாலும் எதிரி ஆவணத்தை திரும்பி கேட்ட பொழுது நான் தருவதாக சொல்லி காலம் தாழ்த்தி வந்தேன் என்றாலும் சரியல்ல.

**7.** நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் எத்தனை நாட்களுக்குள் பணத்தை திரும்ப செலுத்த வேண்டும் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் 15 நாள் காலக்கெடு கொடுத்துள்ளோம். நான் உரிமையியல் பிரச்சனையை குற்றவியல் பிரச்சனையாக மாற்றி உள்ளேன் என்றாலும் நான் உரிமையியல் நீதிமன்றத்தில் தான் பரிகாரம் பெற வேண்டும் என்றாலும் குற்றவியல் நீதிமன்றத்தில் எந்த பரிகாரமும் பெற முடியாது என்றாலும் சரியல்ல. எதிரிக்கு எதிராக காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்தது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றாலும் எனது சாட்சியமும் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

//திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் மைக் மூலம் சொல்லப்பட்டு கணினியில் பதிவுசெய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண்.2, திண்டிவனம்.